OS.No. 370/2018

Date : 24.03.2026

Witness Name & Rank - வேல்ராஜ் - DW1

**சாட்சி அழைக்கப்பட்டு 12 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது**

1. வாதி வழக்கில் குறிப்பிட்டுள்ள 4 ம் அட்டவணை சொத்து தொடர்பாக 1998 ல் எனது அப்பா அவரது சகோதரர்களுடன் பாகப்பிரிவினை செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி 4 ம் அட்டவணை சொத்து 1998 க்கு முன் எந்த மூல ஆவணமும் இல்லை பட்டா மட்டுமே உள்ளது என்றால் சரிதான். அது பிதுரார்ஜித சொத்து என சொல்லி 1998 ல் பாகம் பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையில் எனது தந்தைக்கு எந்த பாகமும் 4ம் அட்டவணை சொத்தில் ஒதுக்கவில்லை என்றால் சரியல்ல, எனது தந்தைக்கும் அருணாச்சலத்திற்கும் 4 ம் அட்டவணை சொத்தில் பாகம் ஒதுக்கப்பட்டது. மேற்படி அருணாச்சலம் அவ்வாறு வழக்கு 4 ம் அட்டவணை 323 காலை சொத்தின் ஒரு பகுதியை 12 ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்ட விவரம் எனக்கு ஏற்கனவே தெரியும் என்றால் அனைவருக்கும் தெரியும்.
2. அதன் பிறகு இன்றைய தினம் வரை 12 ம் பிரதிவாதி சேர்த்து எங்கள் அனைவர் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் சரிதான். அதே போல் காலை 323 சொத்தில் வாதிகள் பெயரில் பட்டா எக்காலத்திலும் இருந்ததில்லை என்றால் சரிதான். எனவே வாதிகள் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரிதான்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் 1956, 1965 மற்றும் 1967 கிரையப்பத்திரங்களின்படி சென்னிமலைக்கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான், ஆனால் கூட்டுக்குடும்ப சொத்துக்கள். வழக்கு அட்டவணை 3 மற்றும் 4 சொத்துக்கள் ஆனது 1927 கிரையப்படியும் பட்டாப்படியும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதே போல் பெரியகருப்பக்கவுண்டரும்,

பெரியசென்னிமலைக்கவுண்டரும் அண்ணன் தம்பி என்றால் சரிதான். மேற்படி 1927 கிரையம் அவர்கள் பெயரில் தான் வாங்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியவில்லை. மேற்படி பெரியகருப்பக்கவுண்டரும் பெரியசென்னிமலைக்கவுண்டரும் அந்த சொத்துக்களை பிரித்து தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பெரியகருப்பக்கவுண்டருக்கு இரண்டு மகன்கள் அவர்கள் மாரப்பக்கவுண்டர் மற்றும் சென்னிமலைக்கவுண்டர் என்றால் சரிதான். மேற்படி மாரப்பகவுண்டரும் சென்னிமலைக்கவுண்டரும் தங்களது பாகத்தை பிரித்து கொண்டார்கள், அந்த சென்னிமலைக்கவுண்டர் வாரிசுகளுக்கிடையே தான் இந்த வழக்கு நடைபெறுகிறது என்றால் சரிதான்.

2. எனது தந்தைக்கும் எனது பெரியப்பாவிற்கும் பலமுறை பதிவு துறை அலுவலகம் சென்று வந்த நிலையில் பதிவு ஆவணங்களில் தன்மை முக்கியத்துவம் தெரியும் என்றால் சரிதான். சென்னிமலைக்கவுண்டர் எங்கு காலமானார் என்றால் சமாளாபுரம் கிராமத்தில் காலமானார். மேற்படி சமாளாபுரத்திற்கும் அருகில் உள்ள பதிவு துறை பதிவு அலுவலகத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் அருகில் சூலூர் பதிவு துறை அலுவலகம் உள்ளது அது 25 கி.மீ ஆகும். பி.வா.சா.ஆ 1 எங்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சூலூர் பதிவு அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு வாதிகள் தாவா சொத்தின் முறைப்படி மதிப்பீடு செய்து அதற்குண்டான நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான்.

3. நான் எனது வழக்கில் வாதி சுப்பாத்தாள் பெயரில் பட்டாவில் இணைக்கப்பட்டதாக சொல்லியுள்ள நிலையில் அது தொடர்பாக வருவாய் துறை நடவடிக்கை எதுவும் நான் எடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் 1ம் வாதி பெயர் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 4 ஆண்டுகளுக்கு முன்பு சேர்க்கப்பட்டது என்றால் இல்லை 2012 ல் சேர்க்கப்பட்டது. சொத்து விவரங்கள் இந்த வழக்கில் சரியாக சொல்லப்பட்டுள்ளது என்றால் இல்லை. அவ்வாறு சொத்து விவரங்கள் தவறு என நான் ஏதேனும் குறிப்பிட்டு காரணங்களை எனது பதிலுரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொன்னதாக ஞாபகம். நான் சொல்வது தவறு என்றும் நான் சொத்து விவரங்கள் தவறு என்று சொல்லாமல் நாங்கள் செய்த

ஆவணங்களை சரியாக பார்த்து அதில் உள்ளது போல் சொத்து விவரங்களை சரியாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்ததாகவே சொல்லியுள்ளோம் என்றால் அது பற்றி தெரியாது. சொத்துக்கள் தொடர்பாக பஞ்சாயத்தார் வைத்து எந்த பைசூலும் பேசவில்லை என்றால் சரியல்ல, பேசினோம்.

4. எப்போது பைசல் பேசப்பட்டது என்றால் வழக்கிற்கு முன்பு பேசப்பட்டது. எனவே வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதி எங்களுடன் சேர்ந்து கூட்டு சுவாதீனத்தில் இருந்தார் அதன்பிறகு சிறு மனகசப்பு வந்ததால் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பஞ்சாயத்தில் வாதியின் மகன்களுக்கு சில காலை சொத்துக்களை தருவதாக நாங்கள் சொல்லி அனுப்பினோம் என்றால் இல்லை. மேற்படி 1ம் வாதி சுப்பாத்தாளுக்கு பாகம் இல்லை என நாங்கள் சொல்ல என்ன காரணம் என்றால் 1ம் வாதிக்கு 55 ஆண்டுகளுக்கு முன்பு சீர் சிறப்பு மற்றும் 50 சவரன் தங்கம் செய்து திருமணம் செய்யப்பட்டது. வேறு காரணம் ஏதேனும் உள்ளதா என்றால் 1ம் வாதி கணவருக்கு பல சொத்துக்கள் உள்ளது எனவே சென்னிமலைக்கவுண்டர் மறைந்து 16ம் நாள் காரியத்தன்று 1ம் வாதி தனக்கு பாகம் வேண்டாம் என வாய்மொழியாக சொல்லிவிட்டார். அவ்வாறு 16ம் நாள் காரியத்தன்று 1ம் வாதி தனக்கு பாகம் வேண்டாம் என சொன்னதை காட்ட ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எனவே அவ்வாறு நான் சொல்லியுள்ளது வழக்கிற்கான பொய் சங்கதி என்றும் 1ம் வாதி எக்காலத்திலும் தனக்கு பாகம் வேண்டாம் என வாய்மொழியாக யாரிடமும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

5. அதே போல் 1ம் வாதியின் தாயார் வள்ளியம்மாளும் தனக்கு பாகம் வேண்டாம் என்று யாரிடமும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, அவர் பணம் ரூ. 5000 பெற்றுக்கொண்டு விடுதலை செய்து கொடுத்துவிட்டார். மேற்படி அது தொடர்பாக ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் இல்லை, பஞ்சாயத்தில் பெற்றுக்கொண்டார். மேற்படி பணம் ரூ.5000 பெற்றுக்கொண்டதாக சொல்லப்படும் சங்கதி ஒருமுறை பஞ்சாயத்தில் மட்டும் நடந்ததா என்றால் ஆமாம். மேற்படி வாய்மொழி விடுதலை எதுவும் 1ம் வாதியோ அவரது தாயாரோ செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சொல்லப்படுகிற பஞ்சாயத்து 1996 காலத்தில் நடந்தது என்றால் சரிதான். மேற்படி 1996 க்கு பிறகு வேறு எதுவும் வள்ளியம்மாள் தொடர்பான பஞ்சாயத்து நடைபெறவில்லையா என்றால்

இல்லை.

6. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ 1 முதல் 7 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் எங்கள் குடும்பத்திற்குள் ஏற்பட்ட ஆவணங்கள் என்றால் சரிதான். அருணாச்சலம் அவர்களின் தொழில் மற்றும் நிறுவனத்தின் பெயர் தெரியுமா என்றால் பவர் லூம் தொழில் செய்தார், கம்பெனி பெயர் தெரியாது. மேற்படி தறி என்ன வகை என்றால் சிறு தறி ஆகும். மேற்படி அருணாச்சலம் நூல் ஆலை அமைக்க முயற்சி செய்து அதில் நட்டம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு அருணாச்சலம் சித்தப்பா முறை என்பதால் எனக்கு அனைத்து விவரங்களும் நன்குதெரியும் நான் மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி அருணாச்சலத்திற்கும் வாதி குடும்பத்திற்கும் வரவு செலவு உண்டு என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி அருணாச்சலம் 1ம் வாதிக்கு 5ம் அட்டவணை சொத்தை பொறுத்து 31.05.2012ம் தேதி செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ள விவரம் தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது.

7. மேற்படி 1ம் வாதி தனது சகோதரர்கள் மீது மிகுந்த பாசத்துடன் இருந்தார் எனவே தனது இளைய தம்பி அருணாச்சலத்திற்கு தொழில் செய்ய 1ம் வாதி தனது கணவர் வீட்டில் இருந்து மிகுந்த பணம் உதவி செய்த போதும் அருணாச்சலத்திற்கு தொழிலில் நட்டம் ஏற்பட்டதால் அருணாச்சலம் தானே மனம் வந்து எங்கள் அனைத்து குடும்ப உறுப்பினர்களுக்கு தெரிய 1ம் வாதிக்கு மேற்சொன்ன 31.05.2012 தேதியிட்ட செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் தெரியாது. எனவே மேற்படி ஆவணம் அருணாச்சலத்தின் குடும்ப உறுப்பினர்களையும் கட்டுப்படுத்து என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 1ல் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை தவிர அந்த 15.09.1998 காலத்தில் பிற சொத்துக்களும் கூட்டுக்குடும்பத்தில் இருந்தது என்பதும் அப்போது 1ம் வாதி உயிருடன் இருந்தார் என்பதும் உண்மை என்றால் சரிதான். எனவே மேற்படி பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள வேறு சொத்துக்கள் இல்லை என்ற வாசகம் இடம்பெறவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 1ல் 1996ல் சென்னிமலைக்கவுண்டர் மறைந்து 16ம் நாளில் பைசல் பேசப்பட்டது தொடர்பாக ஏதேனும் குறிப்பு உள்ளதா என்றால் இல்லை.

8. அதே போல் பி.வா.சா.ஆ 2 முதல் பி.வா.சா.ஆ 7 வரையிலான ஆவணங்களில் 1996ல் சென்னிமலைக்கவுண்டர் மறைந்து 16ம் நாளில் பைசல் பேசப்பட்டது

தொடர்பாக ஏதேனும் குறிப்பு உள்ளதா என்றால் இல்லை. மேற்படி சங்கதி உண்மை என்றால் ஏதேனும் ஒரு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் எனவே நான் வழக்கிற்காக பின்னிட்டு சொல்கிறேன் என்றால் சரியல்ல, எல்லாருக்கும் தெரியும். எனவே பி.வா.சா.ஆ 2 தேவையற்ற ஆவணம் என்றால் சரியல்ல. அதே போல் பி.வா.சா.ஆ. 3 முதல் 7 வரையிலான ஆவணங்கள் எங்கள் குடும்பத்திற்குள் ஏற்பட்ட ஆவணம் அவை வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. இன்றைய தினம் வரை தனிப்பட்ட சுவாதீனத்தில் யாருக்கும் சொத்து வராமல் கூட்டு அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 6 மற்றும் 7 பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் ஏற்பட்ட பிழையை திருத்த வேண்டி எழுதப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே அனைத்தும் சுவாதீனம் கொடுக்கப்படாத பெயர் அளவிலான ஆவணங்கள் என்றால் சரியல்ல.

9. எனவே வாதிக்கு எதிராக வெளியேற்றப்பட்டவர் (Ouster) அல்லது அவருக்கு எதிராக எதிரிடை பரிகாரம் (Adverse Possession) கோர முடியாது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நாங்களும் வாதிகள் குடும்பமும் சுமூகமாக தான் இருந்தோம் என்றால் சரிதான். எங்களது பதிலுரைப்படி ஒரு முறை 1ம் வாதி வாய்மொழியாக பாகம் கொடுத்துவிட்டார் என்ற நிலையும் மறு முறை எதிரிடை பரிகாரம் மூலம் பாத்தியப்பட்டது என்று முரண்பட்டு எதிர் வழக்குரை கொடுத்துள்ளோம் எனவே அது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. இன்று வரை வழக்கு சொத்துக்கள் விவசாய பூமி என்றால் சரிதான். 3 மற்றும் 4 அட்டவணை சொத்து சற்று மதிப்பு மிக்க சொத்து என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நாங்கள் 1ம் வாதிக்கு பாகம் கொடுக்க முன் வந்தோம் ஆனால் 3 மற்றும் 4 அட்டவணை சொத்தில் பாகம் தர மறுத்து தான் வழக்கு என்றால் சரியல்ல.

10. இன்று வரை 1ம் வாதியின் பங்கை முறியடிக்க வேண்டியே 3 மற்றும் 4 அட்டவணை சொத்தில் ஆவணம் ஏற்படுத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. மங்கலத்தில் காலை எண். 405/4 பூமியில் சென்னிமலைக்கவுண்டர் காலத்தில் வீட்டுமனை பிரிவாக பிரித்து விற்பனை செய்யப்பட்டது என்றால் 1990 காலத்தில் விற்பனை செய்யப்பட்டது. நான் வாதி கொடுத்த சட்ட அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு செய்யவில்லை என்றால் சரிதான், நாங்கள் வெளியூர்

**சென்றுவிட்டோம். வெளியூர் சென்றுவிட்டதை காட்ட ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. எனவே அது பொற் சங்கதி என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ளபடி செலவுத்தொகையுடன் பாகம்** கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/−)K.Yuvaraj,B.A.B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.